# செய்தி குறிப்பு

**செ.வெ.எண்: 65 / மே /2020** **நாள்: 22.05.2020**

ஈழுவா மற்றும் தியா சமுதாய மக்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் சாதிசான்றிதழ் வழங்கக்கோரும் முறையீடுகளை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கக்கோரி அரசாணை (நிலை) எண்:39 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்: 21.04.2020-ல் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை கூடுதல் தலைமை செயலாளர் அதுல்ய மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்களை தலைவராக நியமித்து திருமதி.எம்.லெட்சுமி,இ.ஆ.ப இணை ஆணையர் (வருவாய் நிர்வாகம்), இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆகியோரை உறுப்பினர்களாகவும் மற்றும் இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் உறுப்பினர் செயலராக கொண்டு நான்கு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி பொருள் தொடர்பாக குழுவிற்கு கோரிக்கைகள்/முறையீடுகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் 26.05.2020-க்குள் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரிடம் அல்லது குழுவின் உறுப்பினர் - செயலர் / இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், எழிலகம் விரிவாக்கக் கட்டடம், 2-ம் தளம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு எழுத்துப் பூர்வமாகவோ, தபாலிலோ அல்லது மின்னஞ்சல் **(dir-combc@tn.gov.in)** மூலமாகவோ அளிக்கலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**